
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1121

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

52

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# திராவிடக் கலைப் படைப்புகளில் இஸ்லாமியர்கள்!




‘நாம் அனைவரும் ஓர் இனத்தவர் (தமிழர்கள்), பின்பற்றும் மார்க்கம் மட்டுமே வேறானது’ என்ற கருத்தை அண்ணாவைப் பின்பற்றி, முத்தமிழறிஞர் கலைஞரும் தனது கலைப்படைப்புகளில் ஆணித்தரமாக வலியுறுத்தினார். குறிப்பாக, கலைஞரின் வசனத்தில் உருவான ‘பராசக்தி’ திரைப்படம், மதவெறியைக் கடுமையாகச் சாடியது. இதில் குணசேகரனின் (சிவாஜி கணேசன்) நண்பராக வரும் கதாபாத்திரம் ஒரு இஸ்லாமியராகக் காட்டப்பட்டு, அவர்களுக்குள் இருக்கும் தோழமை, மதங்களைக் கடந்து நின்றது.

படத்தில் குணசேகரன் வறுமையின் பிடியில் சிக்கி, சமூகத்தால் அலைக்கழிக்கப் படும்போது, அவருக்கு அடைக்கலம் கொடுத்து உணவு அளிப்பது ஒரு இஸ்லாமிய கதாபாத்திரம்தான். குணசேகரன் ஒரு இந்து. ஆனால், அவர் வீதியில் உணவின்றி வாடும்போது, எந்தவொரு மத அடையாளமும் பார்க்காமல் அவருக்கு உதவ முன்வருவார், அந்த இஸ்லாமியர். ‘ஏன் தம்பி இப்படி இருக்கே? வா வந்து சாப்பிடு’ என்று அவர் அழைக்கும் காட்சி, ‘பசிக்கு மதம் தெரியாது’ என்ற அடிப்படை மனிதாபிமானத்தைப் பறைசாற்றியது.

வட இந்திய மாநிலங்களில் இப்போது மசூதிகளுக்கு முன்னால், ‘ஜெய்ஸ்ரீராம்’ கோஷம் போடுவதும், மசூதிகளுக்கு முன்னால் சங் பரிவார்கள் ஊர்வலங்கள் செல்லும்போது, இஸ்லாமிய வெறுப்பை உமிழும் முழக்கங்கள் எழுப்பப்படுவதும், இன்று இயல்பாக மாறிவிட்டது. ஆனால், இத்தகைய வெறுப்புகளை உமிழ்வது கூடாது என்பதை பராசக்தியிலேயே தனது வசனத்தின்மூலம் வெளிப்படுத்தியிருப்பார் கலைஞர். படத்தில் வரும் ஒரு காட்சியில், மசூதிக்கு முன்னால் இசை ஒலிப்பது தொடர்பான ஒரு விவாதம் வரும். ‘மசூதிக்கு முன்னால் பாட்டுப் பாடினால், அது அந்த மதத்தினரைப் புண்படுத்தும்’ என்ற கருத்தை முன்வைக்கும் அந்தக் காட்சி. மதச் சடங்குகளைவிட, மனித ஒழுக்கமே முக்கியம் என்பதையும் இஸ்லாமியர்கள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவர்கள் என்பதையும் அண்ணா தனது எழுத்துகளில் அடிக்கடி குறிப்பிட்டதை இந்தப் படம் அப்படியே பிரதிபலித்தது.

"பராசக்தியில் நான் ஒரு இஸ்லாமியக் கதாபாத்திரத்தை வைத்ததற்குப் பின்னால், ஓர் அரசியல் இருந்தது. அது, இந்தத் தமிழ் மண்ணில் இஸ்லாமியர்கள் அந்நியர்கள் அல்ல, அவர்கள் நம்முடைய இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகள் என்பதை மக்களுக்கு உணர்த்துவதே" என தனது ‘நெஞ்சுக்கு நீதி’யிலும், ‘முரசொலி’ பொன் விழா மலரிலும், சில நேர்காணல்களிலும் எனப் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர்.

### மலைக்கள்ளன் ரஹீம்

‘பராசக்தி’ மட்டுமல்ல, 1954-இல் வெளியான ‘மலைக்கள்ளன்’ திரைப்படத்தில் வரும் அப்துல் ரஹீம் என்ற கதாபாத்திரம் மிகவும் முக்கியமானது. சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்களைப் பிடிப்பதிலும் ஏழைகளுக்கு உதவுவதிலும் ஒரு இஸ்லாமிய வீரர் காட்டும் துணிச்சல், இதில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கும். கலைஞரின் கதை வசனத்தில் 1956-ஆம் ஆண்டு உருவான ‘ராஜா ராணி’ திரைப்படத்தில், மதங்களைக் கடந்து மனிதநேயம் போற்றப்பட்டிருக்கும். குறிப்பாக, ஒரு இஸ்லாமியக் கதாபாத்திரம் தனது நேர்மையையும், தமிழ் மீதான பற்றையும் வெளிப்படுத்துவது போல காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும். ‘மதம் வேறாக இருந்தாலும், நாம் அனைவரும் தமிழர்கள்’ என்ற திராவிட இயக்கக் கருத்தை இப்பாத்திரங்கள் பிரதிபலித்தன.

> **தமிழ்ச் சமூகத்தின் ஓர் அங்கமாக மாமன், மச்சான், சகோதரன் என உறவுமுறை வைத்து அழைக்கும் தன்மையில் மதத்தைக் கடந்த இணக்கத்தை வளர்த்தன.**

அதேபோல, 1956-இல் அண்ணாவின் கதைக்கு கலைஞர் வசனம் எழுதிய ‘ரங்கோன் ராதா’ திரைப்படத்தில், பர்மாவில் வாழும் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான பிணைப்பை மிக இயல்பாகக் காட்டியிருப்பார். அவர்கள் அந்நியர்கள் அல்ல, ஒரே மொழியைப் பேசும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தை வசனங்கள் வழி கடத்தினார். 1963-இல் வெளியான ‘காஞ்சித்தலைவன்’ திரைப்படம், பல்லவ மன்னன் நரசிம்மவர்மனைப் பற்றிய வரலாற்றுப் படம். இதில் போர்க்களக் காட்சிகளிலும் நிர்வாகத்திலும் இஸ்லாமிய வீரர்கள் மற்றும் தளபதிகள் மிகுந்த வீரத்துடனும் நாட்டுப்பற்றுடனும் செயல்படுவது போல சித்தரிக்கப்பட்டிருக்கும். 1966-இல் வெளியான ‘மணிமகுடம்’ திரைப்படத்தில் விசுவாசத்திற்கு இலக்கணமாக இஸ்லாமியக் கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும்.

பொதுவாக, கலைஞரது கதை வசனத்தில் உருவான படங்களில் வரும் இஸ்லாமியர்கள் அரபி கலந்த உருது பேசாமல், தூய தமிழில் பேசுபவர்களாகவும் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றுபவர்களாகவுமே இருந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் தான் திராவிட இயக்கத் தலைவர்கள் இஸ்லாமியர்களை, ‘பாய்’ என்று அழைக்கும் வழக்கமும் உண்டானது. இன்றைக்கு ‘பாய்’ என்றால் இஸ்லாமியர் என்றே அடையாளமாக மாறியிருக்கிறது. உண்மையில் ‘பாய்’ என்றால் சகோதரர் என்று அர்த்தம். சினிமாக்கள் மூலம் இஸ்லாமியர்களுக்கு எதிராக வெறுப்புணர்வை விதைக்கும் சங் பரிவார்களின் இன்றைய முயற்சிகளுக்கு மத்தியில், முக்கால் நூற்றாண்டுக்கு முன்பே, இஸ்லாமிய இளைஞர்களை, திராவிட இயக்கத்தை நோக்கி ஈர்ப்பதற்குப் பெரும் காரணமாக அமைந்தது அண்ணா, கலைஞர் உள்ளிட்ட திராவிட இயக்கத் தலைவர்களின் நாடக, சினிமா வசனங்கள். இஸ்லாமியர்களைத் தற்காப்பு நிலையில் வைக்காமல், சமூகத்தின் கௌரவமிக்க ஆளுமைகளாகத் திராவிட கலைப்படைப்புகள் அவர்களை உயரிய நிலையில் வைத்தன. அந்த உயரிய நிலை பொது சமூகத்தின் உளவியலாகவும் தமிழ்நாட்டில் மாறியது.

சுருங்கச்சொன்னால், திராவிட சினிமாக்கள் இஸ்லாமியர்களை வெறுப்புக்குரியவர்களாகக் காட்டவில்லை, அந்நியர்களாகச் சித்தரிக்கவில்லை, தமிழ்ச் சமூகத்தின் ஓர் அங்கமாக மாமன், மச்சான், சகோதரன் என உறவுமுறை வைத்து அழைக்கும் தன்மையில் மதத்தைக் கடந்த இணக்கத்தை வளர்த்தன. திரையில் வளர்ந்த பண்பு, சமூகத்திலும் எதிரொலித்தது. அது காலப் போக்கில் தமிழ்ச்சமூகத்தின் தனித்தன்மையாக மலர்ந்தது. இன்று, தமிழ்த் திரைப்படங்களில் இஸ்லாமியர்களைத் தவறாகச் சித்தரித்துப் படங்கள் எடுக்கப்பட்டாலும் அவை, பொழுதுபோக்குத் திரைப்படம் என்பதைத் தாண்டி, அந்தத் திரைப்படத்தின் சித்தரிப்புகளுக்கு மக்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதையும் அறிய முடியும். இந்தத் தனித்தன்மைதான் தமிழ்நாட்டின் அடையாளம். இதை ‘காஷ்மீர் ஃபைலஸ்’, ‘கேரள ஸ்டோரி’ போன்ற திரைப்படங்களால் ஒருபோதும் சிதைக்க முடியாது.

...நீளும்

## தகுதி என்பது மோசடி!

இந்த ஆண்டுக்கான மருத்துவ உயர் படிப்பு, இரண்டாம் கட்ட கலந்தாய்வு முடிந்தும், சுமார் 18,000 இடங்கள் நிரம்பாமல் காலியாக இருந்தன. ஒன்றிய அரசு நிர்ணயித்த நீட் தகுதி மதிப்பெண்ணை எட்டாத மாணவர்கள், கோடிக்கணக்கில் பணம் செலுத்தி தனியார் மருத்துவகல்லூரிகளில் சேர விரும்பாமல் இருந்ததே இவ்வளவு காலியிடங்களுக்குக் காரணம். இதனால், அதிர்ச்சியடைந்த ஒன்றிய அரசு, உடனடியாகத் தகுதி வரம்பைத் தளர்த்தி, நீட் கட் ஆஃப்பை பூஜ்ஜியமாகக் குறைத்தது. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் காலியிடங்கள் தந்த கவலை காரணமாக, ஒன்றிய அரசு வலியுறுத்தி வரும் ‘தகுதி’யைத் தளர்த்திக்கொண்டதா என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எப்படி இருந்தாலும், உயர்நிலை மருத்துவ இடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்ட இந்த முடிவு சரிதான் என்றாலும், ஒன்றிய அரசு நீட் தேர்வை நடத்துவதற்கான நோக்கத்தை இது கேள்விக்குள்ளாக்குகிறது. உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பாக, வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில், “இது தரத்தைப் பற்றியது. கட்-ஆஃப் இவ்வளவு கடுமையாகக் குறைப்பது, கல்வியின் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்” என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர். ‘நீட்-பிஜி என்பது எம்.பி.பி.எஸ். நுழைவுத் தேர்வில் சேர்வதற்கான நுழைவு அல்ல. தேர்வர்கள் ஏற்கெனவே மருத்துவர்கள்’ என்று ஒன்றிய அரசு இதற்குப் பதிலளித்துள்ளது. அப்படியானால், பி.ஜி. மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வை ரத்துசெய்வதுதான் முறையானது.

நீட் தேவையில்லை என்ற தமிழ்நாட்டின் வாதத்திற்குத்தான் இது வலுசேர்க்கிறது. ஒரு தேர்வை நடத்தி, அந்தத் தேர்வின் தகுதி மதிப்பெண்ணை மாணவர்கள் எட்டவில்லை என்பதற்காகத் தகுதி மதிப்பெண்ணைக் குறைப்பதற்குப் பதிலாக, தேவையற்ற அந்தத் தேர்வை நடத்துகிற வீண் வேலையைக் கைவிடுவதுதான் சிறந்த தீர்வாக இருக்கும். இளநிலை மருத்துவப் படிப்புக்கு பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்ணையும், உயர்நிலை மருத்துவப் படிப்புக்கு அவர்களின் இளநிலை மருத்துவப் படிப்பின் மதிப்பெண் அடிப்படையிலும் சேர்க்கை நடத்துவதே நியாயமானது.

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணி நாட்கள்!



கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்

1989-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணி மாநிலத் துணை அமைப்பாளர்களில் ஒருவரும் இன்றைய துணைப் பொதுச்செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என்.சிவா அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர் அணி நிகழ்ச்சி. புகைப்படத்தில், அன்று இளைஞர் அணியில் வீச்சாக இயங்கிய இன்றைய துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.இராஜேந்திரன், போளூர் ரவீந்திரன் ஆகியோருடன் நானும் இடம்பெற்றிருக்கிறேன். கருப்பு வெள்ளையில் காலத்தைக் கண்முன் நிறுத்துகிறது இந்தப் படம்.

**- கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்,
மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
திருவண்ணாமலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### ஒரே ஒரு வெற்றியாளர்!

1957-ஆம் ஆண்டு, கழகம் தேர்தலில் போட்டியிட முடிவு செய்த போது, கலைஞர் நாகப்பட்டினம் தொகுதியில் போட்டியிட முடிவு செய்து, தொகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அண்ணாவிடம் கருத்துத் தெரிவிக்க வந்தார். அண்ணாவோ, கலைஞரை குளித்தலை தொகுதியில் நிற்க வைத்தார். அந்தத் தேர்தலில் திருச்சியில் இருந்து கன்னியாகுமரி வரை, தென் தமிழ்நாட்டில், கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றது கலைஞர் மட்டும்தான்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131